ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2203/8 - 2020 නොවැම්බර් මස 24 වැනි අඟහරුවාදා - 2020.11.24
*2203/8 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கை கல்வி நிருவாக சேவையின் சேவை பிரமாணக் குறிப்பு - 04 ஆவது திருத்தம்

*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதிய, இலக்கம் 2159/11 மற்றும் 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதிய, இலக்கம் 2141/6 மற்றும் 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதிய, இலக்கம் 1956/16 ஆகிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் திருத்தப்பட்ட 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதிய, இலக்கம் 1928/28 எனும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.*

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

**எம். ஏ. பீ. தயா செனரத்,**
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

*2020, நவெம்பர் 20.*

**07. ஆட்சேர்ப்பு முறை:**

**7.2.4.1 எழுத்து மூலப் பரீட்சைக்கான பாடங்கள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.**

| பாடங்கள் | உச்ச புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| (I) கிரகித்தல் | 100 | 40% |
| (II) நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40% |
| (III) பொது அறிவு | 100 | 40% |
| (IV) பகுப்பாய்வுக் கற்கை | 100 | 40% |

1A - G 33244 — 45 (2020/11)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**7.2.4.2 நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் நோக்கங்கள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.**

பதவிக்கேற்றவாறு தர்க்கித்தல் மற்றும் பிரச்சினையைத் தீர்த்தல், தொடர்பாடல் திறன் தொடர்பாக பரீட்சிக்கப்படும்.

**7.3.2 தகைமைகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றன.**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மத்திய அரசாங்க /மாகாண அரசாங்க சேவைக்குரிய ஆசிரியர் சேவையின் உத்தியோகத்தர்கள், இலங்கை அதிபர் சேவையின் உத்தியோகத்தர்கள், ஆசிரியர் ஆலோசகர் சேவையின் உத்தியோகத்தர்கள், இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் உத்தியோகத்தர்கள் மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு உதவி வழங்கப்படுகின்ற பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் பதவி நிரந்தரப்படுத்தப்பட்ட ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் பரிவெனாச்சாரியர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குப் தகுதி பெறுகின்றனர்.

**7.3.2.1 (அ) (i) மற்றும் (ii) பிரிவுகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றன.**

(அ) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் பட்டம் பெற்றிருத்தல்

அல்லது

(ii) போதனாவியல் டிப்ளோமா சான்றிதழ் அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்

**7.3.2.1 (அ) (iii) பிரிவு நீக்கப்படுகின்றது.**

**7.3.2.1 (ஆ) (i), (ii) மற்றும் (iii) பிரிவுகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றன.**

(ஆ) (i) உரிய பாடத்துக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் பட்டம் பெற்றிருத்தல் அல்லது

(ii) உரிய பாடத்தில் ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் அல்லது உரிய பாடத்தில் போதனாவியல் டிப்ளோமா பெற்றிருத்தல்

அல்லது

(iii) தொழில்நுட்பவியல் விடயப் பரப்பின் கீழ் பொறியியல் தொழினுட்பப் பாடத்துக்கு இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தால் வழங்கப்படும் நான்கு வருட உயர் தேசிய டிப்ளோமா (HNDE) அல்லது மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் மூன்று ஆண்டுகளைக் கொண்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT) அல்லது கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் நான்கு வருட பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான தேசிய டிப்ளோமாவை (NDES) அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழினுட்பம் தொடர்பான டிப்ளோமா (DT) அல்லது இலங்கையின் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்ற தேசிய தொழினுட்பத் தகைமை மட்டம் 6 இற்குரிய உயர் டிப்ளோமா (NVQ level 06) பெற்றிருத்தல்.
(விசேட பதவியணிக்குரிய விடயப் பரப்புக்கள் அட்டவணை 'ஆ' இல் காட்டப்பட்டுள்ளது)

**7.3.2.2 (அ) (i), (ii), (iii) மற்றும் (iv) பிரிவுகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றன.**

(அ) (i) பட்டப் படிப்பு தகைமை இருப்பின், அந்தத் தகுதியைப் பெற்ற பிறகு குறைந்த பட்சம் ஐந்து (05) ஆண்டுகள் முனைப்பான கற்பித்தல் அனுபவம் இருந்தல் ;

அல்லது

(ii) ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது போதனாவியல் டிப்ளோமா பெற்றுக் கொண்டிருக்குமிடத்து அந்தத் தகுதியைப் பெற்ற பிறகு குறைந்த பட்சம் 07 ஆண்டுகள் முனைப்பான கற்பித்தல் அனுபவம் ;

அல்லது

(iii) ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் அல்லது போதனாவியல் டிப்ளோமாவுடன் பட்டப்படிப்பு தகுதி பூர்த்தி செய்யப்பட்டிருக்குமிடத்து ஆசிரியர் பயிற்சி அல்லது போதனாவியல் டிப்ளோமா தகைமை பெற்ற பின்னர் 05 ஆண்டுகள் முனைப்பான கற்பித்தல் அனுபவம் ;

அல்லது

(iv) இலங்கை அதிபர் சேவை, ஆசிரியர் ஆலோசகர் சேவை மற்றும் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் உத்தியோகத்தரொருவராக மேற்குறிப்பிட்ட பதவியில் ஐந்து (05) ஆண்டுகள் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல்.

**குறிப்பு** : இங்கே இலக்கம் (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தரொருவராக, அந்தப் பதவியில் ஐந்து (05) வருடங்களுக்கும் குறைவான சேவைக்காலம் இருக்குமிடத்து மேற்கூறிய (i) (ii) மற்றும் (iii) தகைமைகளில் அந்த சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

**7.3.2.2 (ஆ) (i), (ii), (iii) மற்றும் (iv) ஆம் பிரிவுகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றன.**

(ஆ) (i) குறித்துரைக்கப்பட்ட பாடத்திற்குரிய பட்டப்படிப்பு தகைமை இருப்பின், அந்தத் தகைமையைப் பெற்ற பின், குறித்த பாடத்தில் குறைந்த பட்சம் ஐந்து (05) வருட கற்பித்தல் அனுபவத்தைக் கொண்டிருத்தல் ;

அல்லது

(ii) குறித்த பாடத்திற்கு ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது போதனாவியல் டிப்ளோமாவுடன் பட்டத் தகைமையும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் ஆசிரியர் பயிற்சி அல்லது போதனாவியல் டிப்ளோமா தகைமை பெற்ற பிறகு ஐந்து (05) ஆண்டுகள் குறித்த பாடத்தில் முனைப்பான கற்பித்தல் அனுபவத்தைக் கொண்டிருத்தல் ;

அல்லது

(iii) குறித்த பாடத்துக்குரிய ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் அல்லது போதனாவியல் டிப்ளோமா இருப்பின் அந்தத் தகைமையை பெற்ற பிறகு குறைந்தபட்சம் ஏழு (07) ஆண்டுகள் குறித்த பாடத்தில் முனைப்பான கற்பித்தல் அனுபவத்தைக் கொண்டிருத்தல் ;

அல்லது

(iv) விசேட கல்வி /தொழில்நுட்பம் /உடற்கல்வி /மேற்கத்திய சங்கீதம் ஆகிய பாடத்துறைகளுக்கு குறித்துரைக்கப்பட்ட பாடத்துக்குரிய ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் அல்லது போதனாவியல் டிப்ளோமா பெற்றுக்கொண்டிருக்குமிடத்து குறைந்தபட்சம் கடந்த அண்மித்த ஐந்து (05) ஆண்டுகளில் குறித்த பாடத்தில் தொடர்ச்சியான கற்பித்தல் அனுபவத்துடன் ஏழு (07) ஆண்டுகள் கற்பித்தல் அனுபவத்தைக் கொண்டிருத்தல்

**7.3.2.2 க்குப் பின்னுள்ள குறிப்பு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.**

**குறிப்பு**: இந்தப் பிரமாணக் குறிப்பு செயல்வலுப்பெறும் தினத்திலிருந்து ஐந்து (05) ஆண்டுகள் செல்லும் வரை பொறியியல் தொழில்நுட்ப விடயப் பரப்பின் கீழ் விண்ணப்பிப்பதற்காக மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கு குறைந்த பட்சம் மூன்று (03) ஆண்டுகள் குறித்துரைத்த பாடத்தில் முனைப்பான மற்றும் திருப்திகரமான கற்பித்தல் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**7.3.2.3 (iv), (v) மற்றும் (vi) ஆம் பிரிவுகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றன.**

(iv) குறைந்த பட்சம் ஐந்து (05) ஆண்டுகள் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

(v) நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(விண்ணப்பிக்கும் திகதியன்று சேவையில் நிரந்தரமாக்கப்படுவதற்குரிய பதில் கடமை நிறைவேற்றும் காலப்பகுதியிலுள்ள உத்தியோகத்தரொருவரது முன்னைய பதவியில் சேவை நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்) ;

(vi) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல 01/2020 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

**7.3.3.1 எழுத்து மூலப் பரீட்சை தொடர்பான பாடங்கள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றன.**

| பாடங்கள் | உச்ச புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| (I) கிரகித்தல் | 100 | 40% |
| (II) நுண்ணறிவும் உளச்சார்பும் | 100 | 40% |
| (III) கல்வி நிர்வாகமும் முகாமையும் | 100 | 40% |

**7.3.3.2 க்குப் பின்னுள்ள குறிப்பு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.**

**குறிப்பு :** எழுத்து மூலப் பரீட்சையில் அனைத்து வினாப் பத்திரங்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரிகளுள் தகைமை பெற்றவர்கள் வாய்மொழி மூல பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்கும் 40% ஆகக்குறைந்த புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளில் வெற்றிடங்களுக்கு அமைவாக ஆட்சேர்க்க உத்தேசிக்கப்படும் எண்ணிக்கையின் இரண்டு மடங்கு தொகையினர் மாத்திரமே வாய்மொழி மூலப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். விண்ணப்பதாரர்கள் எழுத்து மூல பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகள் வாய்மொழி மூல பரீட்சை சபைக்கு வழங்கப்பட மாட்டாது. புள்ளிகள் வழங்கப்படும் திட்டம் கல்வி அமைச்சின் செயலாளரால் தயாரிக்கப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு, விண்ணப்பங்களை கோரப்படும் சந்தர்ப்பத்தில் பகிரங்கப்படுத்தப்படும்.

**12. சேவைக்குரிய நிபந்தனைகள்:**

**12.1.3. எனப் புதிய பிரிவொன்று சேர்க்கப்படும்.**

தகுதிகாண் காலத்தின் அல்லது ஒரு வருட பதில் கடமை நிறைவேற்றும் காலத்தின் இறுதியில் சேவையில் நிரந்தரப்படுத்தப்படுவதற்கு உத்தியோகத்தரொருவர் சேவை ஆரம்பப் பயிற்சியை வெற்றிகரமாக பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

**12.2. இன் பின்னரான குறிப்பு நீக்கப்படும்.**

**பின்னிணைப்பு "1"**

02. பரீட்சை தொடர்பான விபரங்கள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

| வினாத்தாள் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளி |
|---|---|---|---|
| கிரகித்தல் | 01 மணித்தியாலயம் 30 நிமிடம் | 100 | 40 |
| நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலயம் | 100 | 40 |
| பொது அறிவு | 01 மணித்தியாலயம் | 100 | 40 |
| பகுப்பாய்வுக் கற்கை | 01 மணித்தியாலயம் | 100 | 40 |

05. பரீட்சைக்கான பாடத்திட்டம் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| கிரகித்தல் | பரீட்சார்த்தியிடமுள்ள விடயங்களை புரிந்து கொள்ளும் இயலுமை, தொடர்பாடல் திறன், சாரம்சப்படுத்தல், விவரித்தல் மற்றும் ஆக்கத்திறன் ஆகிய திறன்களை அளவிட வடிவமைக்கப்பட்ட புறவய வினாக்களைக் கொண்டது. |
| நுண்ணறிவுப் பரீட்சை | பரீட்சார்த்தியின் தர்க்கிக்கும் ஆற்றல், மாற்றீடு, பொருட்கோடல், தொடர்பு காணல், மொழிபெயர்த்தல், பிரச்சனை தீரக்கும் இயலுமை, காரண காரியத் தொடர்புகளை புரிந்துகொள்ளல், எதிர்வுகூறல், தகவல்களை ஒழுங்கமைத்தல், வடிவங்களை இனங்காணல் மற்றும் ஆலோசனைகளை பின்பற்றுதல் முதலிய இயலுமைகளை அளவிடுவதற்காக வடிவமைக்கப்பட்ட 50 பல்தேர்வு மற்றும் குறுகிய விடையளிக்கும் வினாக்களைக் கொண்டது. |
| பொது அறிவு | கல்வித் துறை தொடர்பான அதாவது, தேசிய கல்விக் கொள்கை, சட்டம், நவீனமயமாக்கல் மற்றும் மறுசீரமைப்பு, தேசியக் கல்வியின் வரலாறு மற்றும் சமகால தகவல்கள், கல்வியின் தேசிய மற்றும் சர்வதேச போக்குகள் போன்ற துறைகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டு தேசிய மற்றும் வெளிநாட்டுக் கல்வியின் தற்கால தகவல்கள் அதாவது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப, சமூக-பொருளாதார, அரசியல், புவியியல், சட்டம், சுற்றாடல், கலாசாரம், விளையாட்டு தொடர்பாக பரீட்சார்த்திக்குள்ள அறிவைப் பரீட்சிப்பதற்காக தயாரிக்கப்பட்ட பல்தேர்வு / சுருக்க விடை வழங்கும் முறையிலான 50 வினாக்களைக் கொண்டது. |
| பகுப்பாய்வுக் கற்கை | பரீட்சார்த்திக்கு உள்ள பகுப்பாய்வு, தொகுப்பாய்வு மற்றும் படைப்பாற்றல் திறன்களை அளவிட வடிவமைக்கப்பட்ட விடய ஆய்வு உள்ளடங்களாக, அட்டவணைகள் மற்றும் வரைபுகள் ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட புறவய வினாக்களைக் கொண்டது. |

**பின்னிணைப்பு '2'**

02. பரீட்சை தொடர்பான விபரங்கள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

| வினாத்தாள் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளி |
|---|---|---|---|
| கிரகித்தல் | 01 மணித்தியாலயம் 30 நிமிடம் | 100 | 40 |
| நுண்ணறிவும் உளச்சார்பும் | 01 மணித்தியாலயம் | 100 | 40 |
| கல்வி நிர்வாகமும் முகாமைத்துவமும் | 01மணித்தியாலயம் | 100 | 40 |

05. பரீட்சைக்கான பாடத்திட்டம் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| கிரகித்தல் | பரீட்சார்த்தியின் விடயங்களை புரிந்து கொள்ளும் இயலுமை, தொடர்பாடல் திறன், சாராம்சப்படுத்தல், விவரித்தல், பகுப்பாய்வு ஆற்றல் மற்றும் படைப்பாற்றலை அளவிடுவதற்காகத் தயாரிக்கப்பட்ட புறவய வினாக்களைக் கொண்டது. |
| நுண்ணறிவுப் பரீட்சையும் உளச்சார்பும் | <u>நுண்ணறிவுப் பரீட்சை</u><br>பரீட்சார்த்தியின் தர்க்கிக்கும் ஆற்றல், மாற்றீடு, பொருட் கோடல், தொடர்பு காணல், மொழிபெயர்ப்பு, பிரச்சனை தீர்க்கும் ஆற்றல், காரண காரிய தொடர்புகளை புரிந்துகொள்ளுதல், எதிர்வுகூறல், தகவல் ஒழுங்கமைப்பு, வடிவங்களை இனங்காணல் மற்றும் ஆலோசனைகளை பின்பற்றுதல் முதலிய இயலுமைகளை அளவிடுதல். |
| | <u>உளச்சார்பு</u><br>அடிப்படைசார், இலக்கஞ்சார் மற்றும் வடிவஞ்சார் சூழமைவில் முன்வைக்கப்படும், பிரச்சனைகள் மற்றும் அவற்றுக்கான காரணங்களை இனங்காணல், முடிவுகளுக்கு வருதல், தீர்மானம் மேற்கொள்ளல், தொடர்பாடல் திறன் முதலியவற்றில் பரீட்சார்த்தியின் இயலுமைகளை அளவிட தயாரிக்கப்பட்ட பல்தேர்வு / சுருக்க விடை வழங்கல் முறையிலான 50 வினாக்களைக்கொண்டது. |

| *வினாத்தாளின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| கல்வி நிர்வாகமும் முகாமைத்துவமும் | அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் கல்விக் கொள்கைகள், பாடசாலை மேற்பார்வை, மனித மற்றும் பௌதிக வள முகாமைத்துவம், கல்வி நவீனமயமாக்கல், பிரச்சினைகளை இனங்காணல் மற்றும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணல், தீர்மானமெடுக்கும் ஆற்றல் என்பவற்றில் பரீட்சார்த்தியின் திறன்களை அளவிட வடிவமைக்கப்பட்ட புறவய வினாக்களைக் கொண்டது. |

*12-28*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.